

# தொழிற்கல்வி ஒப்பந்தம்

நீங்கள் பெற்றுவிட்டீர்கள் - தொழிற் கல்வியை நிறுவனம் வாய்மொழியாக உறுதிசெய்துள்ளது. அடுத்து நிறுவன தொழிற் கல்விக்குப் பொறுப்பானவர் தொழிற்கல்வி ஒப்பந்தத்தை நிரப்பி உங்களுக்கு அனுப்புவார்கள். நிறுவனத்தால் கையொப்பமிடப்பட்டுள்ள தொழிற்கல்வி ஒப்பந்தத்தில் நீங்களும் கையொப்பமிடவேண்டும். பின் ஒப்பந்தம் செல்லுபடியாகும்.

ஒப்பந்தத்தில் பலதரவுகள் அடங்கியிருக்கும், நிறுவனத்தின் முகவரி, உங்கள்தரவுகள், தொழிலின் பெயர், கற்கும்காலம், ஆரம்ப பரிசோதனை காலம் துறைசார் தொழிற்பாடசாலை போன்றவை. அதேவேளை தனித்தனியான விபரங்களும் அடங்கியிருக்கும், அவற்றை நீங்கள் சாரியாகக் கவனித்தல் வேண்டும்:







## தொழில் அனுமதி

குறிப்பிட்ட வதிவிட அனுமதிகள் வைத்திருப்பவர்கள் (உ-ம். F, L, N) தொழிற்கல்வி கற்பதற்கு தொழில் உத்தரவு ஒன்று தேவைப்படும். இந்த அனுமதியை தொழிற்கல்வி ஆரம்பிப்பதற்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும்.

## சட்டரீதியான பிரதிநிதிகள்

நீங்கள் ஏற்கனவே 18 வயதுடையவராகவும் அதன்படி வயதுவந்தவராகவும் இருந்தால், உங்களுக்கு சட்ட பிரதிநிதி தேவையில்லை. வயதுவந்தவராக தொழிற்கல்வி ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதுடன் அதற்கான பொறுப்பையும் ஏற்றுக்கொள்கின்றீர்கள்.



3. Gesetzliche Vertretung (Vater und/oder Mutter oder Vormundschaftsbehörde)

| | | | |
|---|---|---|---|
| Name | | Vorname | |
| Strasse | | Geschlecht: | m f |
| PLZ/Ort | | Tel.-Nr. | |
| Name | | Vorname | |
| Strasse | | Geschlecht: | m f |
| PLZ/Ort | | Tel.-Nr. | |

## கொடுப்பனவு

கீழே ஒவ்வொரு தொழிற்கல்வி வருடத்திலும் மாதாந்தம் எவ்வளவு ஊதியமாகப் பெறுவீர்கள், நீங்கள் நிறுவனத்தில் அல்லது கல்லூரியில் அதிக திறமைகளைக் காட்டினால் உங்களுக்கு மேலதிக கொடுப்பனவு வழங்கப்படுமா அல்லது நிறுவனம் உங்களுக்கு 13வது மாத ஊதியம் வழங்குமா என்று குறிப்பிடப்பட்டிருக்கும்.



7. Entschädigung — Bruttolohn


| | | | |
|---|---|---|---|
| 1. Bildungsjahr Fr. | pro Monat Woche Stunde | 3. Bildungsjahr Fr. | pro Monat Woche Stunde |
| 2. Bildungsjahr Fr. | pro Monat Woche Stunde | 4. Bildungsjahr Fr. | pro Monat Woche Stunde |
| Zulagen | | | |

13. Monatslohn: ja nein (Abzüge vom Bruttolohn ausser den gesetzlichen Sozialabzügen siehe Ziffern 11 und 12)

நீங்கள் 18 வயதுக்கு கூடியவராக இருந்தால், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஊதியங்களுடன் ஒவ்வொரு முறையும், வயோதிப விட்டுச்செல்பவர்களுக்கான காப்புறுதி, உடல்உள ஊனமுற்றவர் காப்புறுதி தொழில் இழந்தோர் காப்புறுதி கட்டணங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும்.


## தொழில் நேரம்

சுவிசில் வழமையாக வேலைசெய்யும் ஆகக்கூடிய நேரம் சராசரியாக வாரத்தில் 42-45 மணித்தியாலங்களாகும். ஒருசில தொழிற்பகுதிகளில் இது வித்தியாசப்படலாம். நீங்கள் தொழிற்கல்வி கற்கவிருக்கும் நிறுவனத்தில் பொறுப்பானவரிடம் உங்கள் தொழிலுக்கான நேரம் எவ்வாறு இருக்கும் எனக் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.


8. Arbeitszeit
Einschliesslich der schulischen Bildung beträgt die Arbeitszeit
Stunden pro Woche: Arbeitstage pro Woche:
Ein Schultag bzw. -halbtag ist einem Arbeitstag bzw. -halbtag gleichzusetzen.
Bezüglich Tages-Höchstarbeitszeit, Nacht- und Sonntagsarbeit sowie allfälliger Überzeit sind die gesetzlichen Vorschriften zu beachten, insbesondere das Arbeitsgesetz mit den dazugehörenden Verordnungen.
Besondere Regelung


## தொழிலுக்குத் தேவையான பொருட்கள்

பல தொழில்களுக்கு வேலை உடுப்பு சொந்தத் தொழிற் கருவிகள் தேவைப்படும். தொழிற்கல்வி ஒப்பந்தத்தில் நீங்களா கற்பிக்கும் நிறுவனமா வாங்குவது அதன் பராமரிப்பின் பொறுப்பும் குறிப்பிடப்பட்டிருக்கும்.


10. Berufsnotwendige Beschaffungen
Die lernende Person benötigt die folgenden persönlichen Werkzeuge, Berufskleider usw.
Die Beschaffungskosten übernimmt Lehrbetrieb Lernende Person/ gesetzliche Vertretung
Die Reinigung der Berufskleider übernimmt Lehrbetrieb Lernende Person/ gesetzliche Vertretung

## காப்புறுதிகள்

இளையோர்கள் பெற்றோரால் விபத்துக்கான காப்புறுதி செய்திருப்பார்கள், இது மருத்துவக்காப்புறுதிக் கட்டணத்தில் ஒருபகுதியாக இருக்கும். தொழிற்கல்வியின்போது நீங்கள் புதிதாக நிறுவனத்தால் தொழில் நேரத்தில் விபத்துக்காகக் காப்புறுதி செய்யப்படுவீர்கள். அத்துடன் நிறுவனம் உங்களது ஓய்வுநேரத்துக்காகவும் விபத்துக் காப்புறுதி செய்துகொள்ளும். இந்தக் காப்புறுதி கட்டாயமானது என்பதுடன் அதிகமாக கற்பவர்களின் ஊதியத்திலிருந்து இது கழித்துக்கொள்ளப்படும். நீங்கள் புதிதாகத் தொழில்செய்பவராக விபத்துக்குக் காப்புறுதி செய்யப்பட்டுள்ளீர் என்பதை உங்கள் மருத்துவக் காப்புறுதி நிறுவனத்திடம் அறிவியுங்கள்.


11. Versicherungen
**Unfallversicherung**
Die lernende Person ist gemäss Unfallversicherung (UVG) obligatorisch versichert.
Die Prämien für die **Berufsunfallversicherung** übernimmt der Lehrbetrieb.
Die Prämien für die **Nichtberufsunfallversicherung** übernimmt % Lehrbetrieb % Lernende Person/ gesetzliche Vertretung
**Krankentaggeldversicherung** vereinbart ja nein
Wenn ja: Die Prämien übernimmt % Lehrbetrieb % Lernende Person/ gesetzliche Vertretung
(Der Betrieb muss mindestens 50% der Prämien übernehmen.)

## அனுமதி

தொழில் ஒப்பந்தத்திற்கு மாநில தொழிற்கல்வித் திணைக்களம் அனுமதி வழங்கும். இதில் கையொப்பமிடுபவர், உங்கள் தொழிற்கல்விக்குப் பொறுப்பாவார். தொழிற்கல்விக் காலத்தில் ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால், அவற்றை நிறுவனத்துடன் அல்லது உங்களது துறைசார் தொழிற்கல்லூரியுடன் தீர்க முடியாவிட்டால் இந்த நபரைத் தொடர்பு கொள்ளுங்கள்.


15. Genehmigung
Die kantonale Behörde genehmigt diesen Lehrvertrag.
Ort, Datum, Stempel